UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அமைப்பியல் நோக்கில் யாத்திரியின் கவிதை

**மு. ஜெயராணி**
உதவிப்பேராசிரியர், ஆய்வாளர், மொழிகள்துறை - தமிழ்ப்பிரிவு
ORCID ID: 0009-0008-2478-1792

**முனைவர் ஆறுச்சாமி. செ**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், மொழிகள்துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 21

**ஆய்வுச்சுருக்கம்**

கால வேகத்தில் கவிதைத் துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் புதுக்கவிதை. அதன் வளர்ச்சி நிலைகளை நோக்கும் போது கவிதையோடு கோட்பாடுகளும் வளரத் தொடங்கின. பல கவிஞர்கள் தங்களின் கவிதைகளின் பாடுபொருட்களில் கோட்பாடு ரீதியாகவும், வெளிப்படுத்தும் தன்மையிலும் வேறுபடுகின்றனர். அமைப்பியம் என்பது 'ஒரு சமூகத்தின் மனம் சார்ந்த சிந்தனை முறையை விளங்கிக் கொள்வதற்கும் கருத்து நிலையின் புலப்பாடுகள் சார்ந்து இயங்கும் அமைப்பு முறையை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படும் ஓர் சிறந்த அணுகுமுறை' என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார். அமைப்பியல் கோட்பாட்டின் ஒரு பகுதியாகிய தொடர்பாட்டு அணுகுமுறையை புதுக்கவிதையில் பொருத்தி ஆராய்வதே மற்றும் இக்கட்டுரையானது அமைப்பியல் கோட்பாட்டில், யாத்திரியின் கவிதை வழியே கோட்பாட்டினைப் புகுத்தி அதன் மூலம் பல தரப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்துவதில் ஆசிரியர் தனிச்சிறப்பினைப் பெறுகின்றார். புதுக்கவிதை வழி இதுவரை யாரும் கோட்பாட்டு முறையில் பொருத்தி பார்க்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.ஆகையால் இவ்வாய்வு யாத்திரி கவிதைகளின் வழி அமைப்பியல் கோட்பாடுகளை புகுத்தி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** அமைப்பியல், புதுக்கவிதை, யாத்திரி, கோட்பாடுகள்.

**முன்னுரை**

இலக்கியத்திலும், மொழியியலிலும், தொடர்ந்து சமுதாய அரசியல் கருத்துருவங்களிலும் உளவியல் போன்ற பல்துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற அறிவாராய்ச்சி முறையாக அமைப்பியல் காணப்படுகின்றது. அமைப்பியல் ஓர் உலகப்போக்கு எனவும் தத்துவம், பொதுமுறையியல் எனவும் தற்காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ் கவிதை வளர்ச்சியில் பல மாறுதல்களில் இலக்கியம் பல பரிணாமங்களைச் சந்திக்கும் பொழுது கோட்பாடு சார்ந்தும் பல நிலைகளை தன்னகத்தே பெற்று இன்னும் பன்முக வடிவுடன் புத்தொலிப் பெற்றுக் காணமுடிகின்றது. புதுக்கவிதை தன்னகத்தே பெறும் மாற்றத்தினை வடிவுடன் மட்டும் நில்லாது பொருளிலும் பல தாக்கத்தை ஏற்படுத்தி செல்கின்றன. இவ்வாறான பொருண்மை மாற்றத்தினை யாத்திரி அவர்களின் கவிதை வழியே நுண்ணிதின் ஆய்ந்துணர முடிகிறது. இவ்வாறு அமையக்கூடிய பொருண்மை மாற்றத்தினையும் ஆங்காங்கே பொதிந்து கிடக்கும் அமைப்பியல் கோட்பாட்டையும்

விளக்கும் படி ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**அமைப்பியல் ஒரு விளக்கம்**

அமைப்பியல் (Structuralism) என்பது ஒரு கோட்பாடாகும். இது ஒரு பொருளை அல்லது அமைப்பை அதன் கூறுகளாகவும் அந்த கூறுகளுக்கு இடையேயான உறவுகளாகவும் பகுப்பாய்வது செய்வதாகும். இது ஒரு பொருள் அல்லது அமைப்பின் வெளித்தோற்றத்தை மட்டும் பார்க்காமல் அதன் உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாடு களை புரிந்து கொள்ளவும் அதன் அமைப்பினை தெளிவுரவும் வழிவகை செய்வதாக அமைவதே அமைப்பியல் கோட் பாடாகும். அமைப்பியல் பிரஞ்சு நாட்டில் தான் முதலில் தோன்றியது என்பர். இவ்வணுகுமுறையை முதலில் பயன் படுத்தியவர் மானுடவியல் அறிஞரான லெவிஸ்டிராஸ் என்பவர் ஆவார். இலக்கியம், நாட்டுப்புறவியல், மானிடவியல் போன்ற பல்வேறு தளங்களில் இவ்வணுகுமுறையை பயன்படுத்தியுள்ளனர்.

தமிழில் தி.சு நடராசன், கா.பஞ்சாங்கம், போன்ற திறனாய்வாளர்கள் அமைப்பியலின் பல்வேறு நிலைக்களன்களை விளக்கி அதன் வளர்ச்சி நிலையை மேம்படுத்தும் விதமாக கோட்பாட்டினை தமிழ் இலக்கிய நெறிக ளுக்குள் புகுத்தி ஆய்வினை மேற் கொண்டனர்.

**அமைப்பியலும் இலக்கியமும்**

அமைப்பியலறிஞர்கள் இலக்கியத்தை தனக்குள் பல உறுப்புக்கள் கொண்ட ஓர் ஒழுங்கமைவு என்றும், அமைப்பு என்பது தன்னளவில் கட்டுக்கோப்புகளையும், உயிர்த் தன்மை உடையதாகவும் மேம்பாட்டுடனும் அமைத்தனர். அதனுடைய உறுப்புக்கள் அல்லது பகுதிகள் அந்த அமைப்பின் எல்லைக்குள்ளிருந்தே ஆராயப்படக் கூடியவை. "இலக்கியத்தை அல்லது எந்தப் பொருளையும் ஆய்வுக்கென எடுத்துக் கொள்கின்ற போது அதனைத் தனக்குள் பல உறுப்புகள் கொண்ட குறிப்பிட்ட ஓர் ஒழுங்கமைவுடன் கூடிய ஓர் அமைப்பாக அமைப்பியல் காணுகிறது. அமைப்பு என்பது ஒரு முழுமை இந்த முழுமை அதன் ஒவ்வொரு உறுப்பையும் பகுதியையும் குறிக்கும் என்பர்" (நடராஜன், 2003). மேலும் இலக்கியத்தை மொழியாக கொள்ள வேண்டும் என்று அமைப்பியல் முன்மொழி கின்றது. 'மொழி அமைப்பைக் கண்டறிவது போல் இலக்கியத்திலும் உள்கட்டமைப்பைக் காணுவதை அமைப்பியல் திறனாய்வின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது என ந.முத்துமோகன் குறிப்பிடுகின் றார்" (ந.முத்துமோகன்.2008). இலக்கியத்தை மொழியென்று கொள்ளும் போது அதனை இலக்கிய அலகுகளால் ஆன கட்டமைப்பு என்று அறியமுடிகின்றது. இலக்கியப் படைப்பின் ஓர் அலகு பிற அலகுகளுடன் கொள்ளும் உறவு நிலைத்த உறவல்ல அது மாறுபடும் உறவு. உறவு மாறுபடுவதற்கு ஏற்ப பொருண்மையும் மாறுபடுகின்றன. அமைப்பியல் மொழி, தொன்மம், இலக்கியம் ஆகியவற்றின் உள்ளீடான ஒழுங்கு, முழுமை, கட்டமைப்பு, உருவம் ஆகியவற்றை ஆராய்ந்து, சமூக யதார்த்தத்திலிருந்து இலக்கியத்தைப் பிரித்து வைத்து இலக்கிய அலகுகளுக்கு இடையிலான உறவுகளாலும், உறவுகளின் கட்டமைப்பாலும் விளக்கிட அமைப்பியல் முனைகிறது.

**அமைப்பியல் கோட்பாட்டின் முக்கிய அம்சங்கள்**

**அ. உறுப்புகள் மற்றும் உறவுகள் (Elements and Relationships)**

ஒரு அமைப்பு அதன் பல்வேறு உறுப்புகளை கொண்டுள்ளது அந்த உறுப்புகளுக்கு இடையே ஒரு குறிப்பிட்ட தொடர்பு உள்ளது. இந்த உறவுகளைக் கொண்டு அமைப்பின் செயல்பாடுகளை புரிந்து கொள்ள முடியும். இதனையே கவிஞர் தான் சந்தித்த பெண் மூலம் உறவின் மேன்மையைச் சுட்டுகிறார்,

**குழந்தைத்தனங்களும், அப்பாவி கண்களும்,**
**நீங்கி போன**
**பக்குவ முகத்திற்கு என்று தனியான**
**யவ்வனம் உண்டு.**
**இறுக்கம் தளர்ந்து மெல்லமாகக் கனிந்த**
**உடலுக்கென்று**
**தனி கவர்ச்சி உண்டு.**
**இளமையின் நதி முதுகடலில் சென்று**
**சேரும் முன்**
**பேரருவியாக விஸ்வரூபிக்கும் காலம்**
**மகத்தானது.**
**அருவியின் பிரம்மாண்டம் எல்லோர்**
**கண்களையும்**

**பறிக்கக் கூடியது.**

**மனத்தைக் கவர்ந்து அடிமை செய்யக்கூடியது.**

**மொத்தமாக ஒப்புக் கொடுக்கத் துணிய சொல்வது.**

**துணிந்து நிற்கிறேன்.**

**பாரடி,என் காமலீலா வினோதி!**

(கனிந்து உதிர்தலே காலவிதி) ப.எண்-65

பெண் என்பவள் காலங்காலமாக காலத்தின் கட்டாயத்தின் பேரில் ஏதோ ஓர் குடும்ப வாழ்க்கையை வாழ நேரிடுகிறது. ஆண் நேசித்த பெண்ணை வாழ்நாள் முழுவதும் பிரியவேண்டிய சூழல் ஏற்படுகிறது என்பதை மிகுந்த ஏக்கத்துடன் பதிவிடுகிறார்.

### ஆ. உள்ளமைவு (Structure)

அமைப்பியல் கோட்பாடு ஒரு பொருளை முழுமையான அமைப்பாகவும் செயல்பாடாக வும் கருதுகிறது. மேலும், அதன் கூறுகளின் உறவுகள் ஒரு குறிப்பிட்ட அமைப்பை உருவாக்குவது மற்றும் உருவாக்குவதோடு அல்லாமல் உள்ளமைவை கட்டமைப்பதாக இருக்கிறது. கட்டமைப்பு என்பதை கவிஞர் தன் கவிதையில் அழகாக வடிவமைக்கிறார்.

**இன்றுன் வாழ்வில்**

**உபயோகமற்ற ஆறாம் விரலாகத்தான்**

**ஆகிப் போனேன்.**

**போதும். இனியும் பற்றாதே**

**என்னை போகவிடு என மன்றாடிக்**

**கொண்டிருப்பதெல்லாம் எதற்கு?**

**நான் போக விரும்புகிறேன் என்பதை தெரிவிக்கவா?**

**இல்லை தேவி!**

**நான் போனால்**

**உனக்கு அது**

**தெரியவே தெரியாமல் போய்விடும்**

**நீயென்னை தேடவே மாட்டாய்**

**எனும் உண்மையை எனக்கு நானே மறைப்பதற்கு!**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப.எண்-80

இக்கவிதையின் மூலம் ஆசிரியர் பிரிந்த காதலையும், அன்பின் ஆழத்தையும் உட்பொருளாகவும், குறிப்புப்பொருளாகவும் வரையறுக்கிறார்.

### இ. வெளிப்படைத்தன்மை (Transparency)

அமைப்பியல் கோட்பாடு ஒரு அமைப்பின் கூறுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை வெளிப்புற காரணிகளை பார்க்காமல் அதன் அமைப்பியல் உருவ வழியிலேயே புரிந்து கொள்ள வலியுறுத்துகிறது. அன்பால் இவ்வுலகம் நிறைவு பெற்றது, அன்பே எல்லாவற்றிற்கும் ஒரு சிறந்த கருவி. இருபாலரும் அன்பால் மட்டுமே வாழ்வில் வெற்றி பெற முடியும் என்பதை வெளிபடுத்துகிறார்.

**பெண் காதல் என்ப,**

**பழைய நீதான் வேணும்**

**பழைய உன்னை ஏன் என்னிடம்**

**அழைத்து வர மறுக்கிறாய் என புதிய அவனின்**

**சட்டை பிடித்து அழுது கொண்டிருப்பது**

**ஒரு கணமேனும்**

**பழைய அவனைப் பார்த்து விடும்**

**போலி நம்பிக்கைகளின்**

**கைப்பிடித்துக் காத்திருப்பது**

**அந்த அவன் இனி**

**திரும்பவே மாட்டானென தெரிந்த நாளில்**

**பகிர முடியாத காதலை தூக்கிக்கொண்டு**

**சொல்லிக் கொள்ளாமல் வெளியேறுவது**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப.எண்-116

**அமைப்பியலும் கவிதையும்**

கவிஞர் கவிதையின் மூலம் மனித உறவுகளில் ஆணும் பெண்ணும் பழகும் முறையில் ஒன்றாக நட்பு கொள்ளும் முறையை இச்சமூகம் வேறு ஒரு பெயரிட்டு அழைப்பது உறவிற்கு கிடைக்கும் தவறான அமைப்பாக இருக்கிறது என்பதை,

**எல்லா உறவுக்கும்**

**ஏதாவது பெயர் வைத்தே ஆக வேண்டுமா என்ன!**

**சும்மா விடேன்**

**அதன் போக்கில் இருந்து விட்டுப் போகட்டும்.**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப. எண்-7

என்னும் கவிதை வரிகளில் படம் பிடிக்கிறார். கவிதையின் அமைப்பை அதன் கட்டமைப் போடும் செயலோடும் பொருத்தி எழுதுதல் என்பதில் ஒரு எழுத்தாளன் மிக அழகாக

கையாள்வது என்பது எளிமையானவை இல்லை என்றாலும் அதை சூட்சுமமாகவே கவிஞர் புகுத்தியுள்ளதனை அறியமுடிகிறது. மேலும்,

**ஒரு சொல் ஒரே ஒரு சொல்**

**ஊசியென சுருக்கு என்று தைத்து விட்டாய்**

**அதற்குப்பின்**

**நீ சொல்லும் ஆயிரம் அன்பு**
**சொற்களுக்கும்**

**முனை மழுங்கி போய்விடும்.**

(கனிந்து உதிர்தலே காலவிதி) ப. எண்-71

என்ற கவிதையில் மேற்காணும் கவிதைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டு ஓர் உறவில் வார்த்தை அமைப்பு மிக கவனமாக கையாள்வது அவ்வுறவை நிலைத்து நிற்க வைக்க முடியும் என்ற வெளிப்படையான அமைப்பு நிலையை வரையறுத்துள்ளார். மற்றொரு கவிதை வழியே ஒரு பெண் இன்னொரு ஆணை பார்த்து நான் உனக்கு முக்கியமாகவும் தனித்தன்மை மிக்கவளாக வும் இருக்க வேண்டும் என்ற உளவியல் அமைப்பை,

**உனக்கு நான் எல்லோரையும் போல்**
**தானா ?**

**எனும் வினா,**

**காதலை திறக்கும் சாவி**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப.எண்-27

என்ற வரிகளில் மிகவும் இயல்பான நடையில் பெண் ஒவ்வொரு முறையும் தன் இருப்பை ஆணிடம் வலியுறுத்திக்கொண்டே இருத்தலே காதல் என இயல்பாக வெளிப் படுத்தியுள்ளதனை நுண்ணிதின் உணர முடிகிறது.

**பெண்ணின் மேன்மையும் உள்ளமைவும்**

பெண் என்பவள் ஆணின் துணையாகவும் அவனையே சார்ந்து இருப்பவளாகவே காலங் காலமாக கட்டமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு அல்லது உள்ளமைவு பொருளாகவே கருதப்படுகிறாள் என்பதை ஆசிரியர்,

**எத்தனை பெரிய பிணக்காகட்டும்**

**சரி செய்து விடக் கூடிய சாத்தியங்களை**

**கடைசி இணுக்கு வரை**

**ஆவி கரையை தேடுவேன் காதல் அதுதான்.**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப. எண்-26

பெண்ணின் வழியாக அவளை ஆணிடத்தில் சரணடையும் ஒரு சரணாகதியை காட்டி இருக்கிறார். மேலும், ஆண் என்பவன் பெண்ணை ஒரு குறிப்பு பொருளாகக் கொண்டு அவளிடத்தில் ஒரு நிறைய அன்பை எதிர்பார்ப்பவனாக காலங்காலமாகவே கட்டமைக்கப்படுகிறான் என்பதனை,

**எல்லாப் பிரயத்தனங்களும்**

**இன்னும் ஒரு சிட்டிகை கூடுதல்**
**அன்பிற்காகத் தான்**

**எத்தனை இட்டாலும் நிரம்பாத மனதில்**

**என்ன கொட்டியும் போதாமையே எஞ்சும்**

**நிறையன்பு என்பது கற்பனை தேவி**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப. எண்-30

கூடுதல் அன்பினால் ஓர் உயிர் மீண்டும் புத்துயிர் பெறமுடியும் என்று சுட்டி காட்டியி ருக்கிறார்.

**நீ எனக்கு ஏன் வேண்டாம் என்பதற்குப்**

**பக்கம் பக்கமாக காரணங்கள்**

**சொல்லிக் கொண்டிருக்கிறேன்**

**வேலை மெனக்கெட்டு சொல்லிய**

**அதில் தான் இருக்கிறது**

**நீ எவ்வளவு வேண்டும் என்பதும்**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப. எண்-82

என்ற கவிதை வரிகளில் கவிஞர் பெண் என்பவள் இருத்தலின் அவசியத்தை நிமிடத் திற்கு நிமிடம் நிரூபிக்கும் வகையிலேயே கட்டமைக்கப்பட்டிருந்தாலும் அவளைப் பிரிந்து வாழும் வாழ்க்கையானது சற்று கடினமானது தான். அதோடு இல்லாமல் உண்மையான அன்பை உரிய ஒருவரைத் தவிர வேறு எவராலும் எது செய்யினும் நிரப்புதல் இயலாது. அது ஏதோ ஓர் உயிரின் மூலம் ஒருமுறை மட்டுமே வாழ்வில் நிகழும் என்பதைச் சுட்டுகிறார்.

**சொர்க்கம் என்னவாகவும் -**

**இருந்துவிட்டுப் போகட்டும்.**

**எல்லா பக்குவங்களையும் உதிர்த்துவிட்டு**

**கிடந்து தேம்ப**

**ஒரு மடியில்லாத வாழ்வு**

**சர்வ நிச்சயமாக நரகம்.**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப.எண்-103

அன்பால் நிறைந்த உலகில் எவராகிலும் அன்போடும் நிறைந்த காதலோடும் தன்

வாழ்வில் நிகழும் ரகசியங்களை தனக்கு உரிய ஒருவரிடம் கொட்டித் தீர்த்துக் கொள்ளும் வாழ்வே சிறந்த வாழ்க்கை என்பதனை ஆசிரியர் கூறுகிறார். இதனையே பாரதியார் இவ்வுலகம் அன்பால் நிறைந்தவையே என்பதை,

**காதல் காதல் காதல்**

**காதல் போய்யின்**

**சாதல் சாதல் சாதல்**.......

என்ற வரிகளில் அன்பின் தன்மையையும், அவ்வாறான அன்பிற்கு உயிரையும் விடுதல் என்ற கருத்தினை முன்னிறுத்துவதை காணமுடிகின்றது.

உயர்திணைப் பொருளிலும், அஃறிணை பொருளிலும் அன்பு என்ற ஒன்றைக் கட்டமைப்புக்குள் அடக்கி விடுவது சாத்திய மான ஒன்றாகும். அன்பினால் மட்டுமே அனைத்தையும் சாதிக்க இயலும் அதிகார மும், ஆணவமும் ஒருபோதும் எதையும் சாதிக்காது என்பதே நிதர்சனமான உண்மை என்பதனை,

**உன்னிடம் நான்**

**எதன் பொருட்டும்**

**நடிக்க வேண்டியதில்லை என்பது**

**எத்தனை பெரிய ஆறுதல் தெரியுமா!**

**எத்தனை பெரும் நிம்மதி தெரியுமா!**

**நீயே என் சுதந்திரம்**

**நீயே என் சுவாத்தியம்**

(கனிந்து உதிர்தலே கால விதி) ப. எண்-34

என்னும் வரிகளின் மூலம் கவிஞர் அன்புமிக்க ஒருவரிடத்தில் நாம் நாமாக இருத்தல் மிக அவசியமான ஒன்றாகும் என்ற செய்தியினை முன்னிறுத்தி கூறியிருப்பதையும் அறிய முடிகிறது. எந்த சூழலில் நடித்து அவர்களிடத்தில் அன்பையும் விருப்பத்தையும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது, என்பதை இக்கவிதை வரிகளில் ஆசிரியர் கூறுகிறார்.

## முடிவுரை

கவிஞர் யாத்திரி அவர்கள் தன் கவிதைகளின் வழியே மிகவும் நுட்பமும், சிக்கலும் வாய்ந்த அமைப்பியல் மற்றும் அமைப்புகளின் அடிப்படை கருத்தாக்கங்களை தன் வரிகளின் வழியே சிறப்புற எடுத்துரைக்கும் பாங்கினை உற்று நோக்கும் போது அறியமுடிகிறது. கவிதை வரிகளில் மொழியின் அமைப்பு தன்னிச்சையானது அவைகளுக்கு இடையே உருவாகும் வித்தியாச உறவுகளால் உருவாக்கப்படுகின்றது என்ற கருத்தாக்கத்தி னையும் அறிய முடிகிறது.

கவிதையும் கவிதை வரிகளும் சமகால மக்களின் வாழ்வியல் முறைகளையும் அதன் பாடுபொருளையும் விளக்கும் போது அதனுள் பல கட்டமைப்புகளையும் விளக்கு கின்றார். கவிதையை எடுத்தியம்புவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட கவிஞராக உள்ள யாத்திரி அவர்கள் அமைப்பியல் முறையில் பெண்மை, சமகாலம், காதல், ஆணின் மனநிலை போன்ற கட்டமைப்புகளை எளிதில் உடைத்தெரியக் கூடிய நிலையினையும் காணமுடிகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. அ.அமணவாளன்,. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய கோட்பாடுகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -1995
2. முனைவர் க.பஞ்சாங்கம், நவீனக்கவிதை யியல், எடுத்துரைப்பியல் காவ்யா பதிப்பகம், சென்னை - 2003
3. தி.சு. நடராஜன் திறனாய்வுக் கலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்- 2022
4. வல்லிக்கண்ணன் . புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், எழுத்து பிரசுரம் சென்னை – 1977.
5. கவிஞர் யாத்திரி. கனிந்து உதிர்தலே கால விதி(கவிதைத் தொகுப்பு) வாசகசாலை பதிப்பகம் -2024.
6. க.பஞ்சாங்கம் இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் – அகரம் பதிப்பகம்-2011
7. ஞா.ஸ்டீபன் அமைப்பியல் கோட்பாடும் ஆய்வுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகம்-:2013
8. தமிழவன். அமைப்பியலும் அதன் பிறகும், அடையாளம் பதிப்பகம்-2008
9. அழகரசன். பின் அமைப்பியல், அடையாளம் பதிப்பகம்-2011